<u>தொடர்ச்சி – 5</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (1.4.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2015–2016ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை:–**

---

வருவாய் பற்றாக்குறை என்பது வருவாய் வரவிற்கும், வருவாய் செலவினத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு. ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் பொருளாதார நிலை நன்றாக உள்ளபோது பொருளாதார வளர்ச்சியின் பயனால் வருவாய் வரவும் கணிசமாக உயரும். அத்தகைய நேரங்களில் செலவை விட வருவாய் கூடுதலாக இருக்கும். இதனால் வருவாய் உபரி ஏற்படும். பொருளாதார வளர்ச்சி குறையும்போது வருவாய் வரவு குறையும். ஆனால் நிர்வாக செலவு, மானியங்கள், நலத்திட்டங்கள் ஆகியவற்றிற்கான செலவுகளைத் திடீரென குறைக்க இயலாது. இதனால் வருவாய் பற்றாக்குறை ஏற்படும். மாநில அரசின் செலவு பெரும்பாலும் வருவாய் செலவினங்களாகவே உள்ளது. ஏனெனில், கல்வி, சுகாதாரம், நிர்வாகம் மற்றும் காவல் துறை போன்றவற்றுக்கு கணிசமாக மாநில அரசு செலவிட வேண்டி உள்ளது. அதனால் தான், பெரும்பாலும் வருவாய் பற்றாக்குறையும் வருவாய் உபரியும் பொருளாதார சுழற்சிக்கு ஏற்றவாறு மாறி மாறி ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. நிதிச் சூழ்நிலையைத் திறம்படக் கையாண்டு, மாநில அரசு செயல்பட்டு, திட்டங்கள் பாதிக்கப்படாத வகையில் நிதி மேலாண்மை மேற்கொள்ளப்பட வேண்டும். இதைத்தான் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பாக செய்து வருகிறது, எனவே வருவாய் உபரி என்பதும், பற்றாக்குறை என்பதும் ஒரு சுழற்சியே என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், 2011-12 ஆம் ஆண்டில் வருவாய் உபரி கணிசமாக இருந்தது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இவை கட்டுக்குள் உள்ளதால் எந்த கவலையும் படத்தேவையில்லை என்பதையும்

தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக கடந்த 15 ஆண்டுகளின் நிதிநிலையைப் பார்க்கும்போது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதாவது 2009-2010ல் 3,531 கோடியும் 2010-2011ல் 2,729 கோடியும் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. அது மட்டுமல்லாமல், வரும் 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைகளில், ஆந்திரபிரதேசம், கேரளா, மகாராஷ்டிரா, ஹரியானா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் கூட வருவாய்ப் பற்றாக்குறை நிலையை எதிர்நோக்கியுள்ளன. எனவே, 2015-2016 ஆம் ஆண்டின் வருவாய்ப் பற்றாக்குறை என்பது நமது தமிழக அரசை மட்டும் நெருக்கிடும் சூழ்நிலையன்று. இவ்வருவாய்ப் பற்றாக்குறை, ஒட்டுமொத்த இந்திய நாட்டுப் பொருளாதார சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நிதிப் பற்றாக்குறை என்பது, மாநிலத்தின் மொத்த செலவினத்திற்கும், வருவாய் வரவிற்கும் உள்ள பற்றாக்குறையைக் காட்டுவது. மாநிலத்தின் செலவு பெரும்பகுதி வருவாய் செலவாக உள்ள நிலையிலும், மாநில அரசுகளுக்கு குறைந்த அளவே வருவாய் ஆதாரம் உள்ள நிலையிலும், அதன் வருவாய் ஆதாரத்தை வைத்தே முழு செலவையும் ஈடு செய்ய இயலாது. எனவே, இந்த பற்றாக்குறையை ஈடுசெய்ய, கடன்மூலம் நிதி திரட்டி, வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிறந்த பொருளாதார வழிமுறையாகும். ஆனால் இந்தப் பற்றாக்குறை கட்டுக்குள் இருக்க வேண்டும். நமது மாநிலத்தை பொருத்தவரை நிதிப் பற்றாக்குறை அதன் அதிகபட்ச வரம்பான மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்கு குறைவாகவே உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 10 ஆண்டுகளைப் பார்க்கும்பொழுது, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2010-2011 ஆம் ஆண்டில் ரூபாய் 16,647 கோடி ரூபாயாக

இருந்த நிதிப் பற்றாக்குறை, 2011-2012 ல் ரூபாய் 17,274 கோடியாக உள்ளது. இந்த நிதிப் பற்றாக்குறை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சியில் 2251 கோடி ரூபாயாக மட்டுமே இருந்தது. ஆனால் இது தி.மு.க ஆட்சியின் இறுதியில் 16,647 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. இது, 2014-2015 ல் ரூபாய் 27,346 கோடியாக உள்ளது. நிதிப் பற்றாக்குறை இவ்வாறு ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்திருந்தாலும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் (GSDP) நிதிப் பற்றாக்குறையின் அளவு, 2014-2015ல் 2.90 சதவீதமாக இருந்து தற்போது 2015-2016 ஆம் ஆண்டில் இந்த அளவு 2.89 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த அளவு 2010-2011 ல் 3.04 சதவீதமாக இருந்தது என்பதையும் தற்போது 2.89 ஆக குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பதின்மூன்றாம் நிதி ஆணையத்தின்படி இவ்விகிதம் 3.0 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களது வழிகாட்டுதலின்படி தமிழகம் மேற்கொண்டு வரும் சிறப்பான நிதி மேலாண்மையின் காரணமாகவே இந்த அளவு 3 சதவீதத்திற்கு உட்பட்டே உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு எ.வ.வேலு பேசும்போது, பெட்ரோலிய பொருட்களின் விலை குறைவால் மூன்று மாதங்களில் 1,000 கோடி ரூபாய் வரி இழப்பு என்றால் ஒரு ஆண்டுக்கு 5,000 கோடி இருக்குமே என்றும், ஆனால் 2,141 கோடி என்று குறிப்பிட்டுள்ளதால் மீண்டும் வரி போடுவீர்களா என்ற அச்சத்தை வெளிப்படுத்தினார். அதற்கு நான்கூட மனக்கணக்கு வேண்டாம் என்று கூறினேன். 2014-15 ல் 1,000 கோடி வரி இழப்பு கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து ஏற்பட்டது. இது கிட்டத்தட்ட 5 மாதங்களில் ஏற்பட்ட இழப்பு. அது 2015-16 ஆண்டு முழுவதும் 2,141 கோடி ரூபாய்

எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு அரசின் வருவாய் குறைந்தாலும் மற்ற மாநில அரசுகள் மதிப்புக்கூட்டு வரியை உயர்த்தியதுபோல் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர்த்தாது என தெளிவாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். இதற்கு பிறகும் அவருக்கு இந்த அச்சம் தேவையில்லை.

எனவே, பல்வேறு விமர்சனங்கள், கருத்துக்கள் நிதிநிலை அறிக்கைமீது தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு விரிவான விளக்கத்தை வழங்கியுள்ளேன். அவை நியாயமாக சிந்திப்பவர்களுக்கு திருப்தியை அளிக்கும் என கருதுகிறேன்.

தமிழக மக்களின் மேன்மைக்காகவும், தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காகவும் பல அரிய திட்டங்களையும், அதற்கான ஒதுக்கீட்டுகளையும், பொதிந்து வைத்துள்ள இந்த நிதிநிலை அறிக்கைக் குறித்து ஒரு சில எதிர்க்கட்சிகள் மிகவும் குறைத்து எடைபோடுகின்றன. மக்கள் மத்தியில் தங்கள் பெயரை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என இல்லாததையும், பொல்லாததையும் இட்டுக்கட்டி அறிக்கை விடுகிறார்கள்.

நிதிநிலை அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை பற்றி தானாகவும் படிக்காமல், அடுத்தவர் சொல்வதையும் கேட்காமல் வெளிநடப்பு என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானுட சமுதாயம் இன்பமுற
மகிழ்ச்சிக் கோட்டையைப் படைத்த இறைவன்
இரும்புப் பூட்டு கொண்டு அதைப் பூட்டி வைத்தானாம்.

மனிதர்கள் அதனை அனுபவிக்க வேண்டுமெனில்
சரித்திர புருஷர்கள் தருகின்ற சாவியால் திறந்து

வளம் பெறலாம் என வரமும் கொடுத்தானாம்!

இறை தந்த வரம் பலிக்க
சாவிகள் கொண்டு வந்தார்கள்
சமுதாய சிற்பிகள்!

ஏசு பிரான் ஒரு சாவி தந்தார்,
அது, அன்பு !

வள்ளுவர் ஒரு சாவி கொடுத்தார்,
அது, அறம்!
நபிகள் நாயகம் ஒரு சாவி வழங்கினார்,
அது, சகோதரத்துவம்!

காரல் மார்க்ஸ் ஒரு சாவி அளித்தார்,
அது, பொதுவுடமை!

அண்ணல் காந்தி ஒரு சாவியைக் கண்டார்,
அது, அகிம்சை!

தந்தை பெரியார் ஒரு சாவி தந்தார்,
அது, பகுத்தறிவு!

பேரறிஞர் அண்ணா ஒரு சாவி தந்தார்,
அது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு !

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒரு சாவி தந்தார்,

அது, மனிதநேயம் – மனிதாபிமானம் !

இவை அத்தனையும் கலந்து
தமிழ் மக்கள்
துன்பமெனும் இருள் நீங்கி
இன்ப ஒளி காணவும்,
வாழ்வின் துயரம் நீங்கி
வளமான உயரம் காணவும்
எண்ணில்லாத் திட்டங்கள் தந்து,
புது விடியல் எனும் சாவி தந்தார்,
மாண்புமிகு அம்மா அவர்கள்.

ஈகைக்கும் வாகைக்கும் இலக்கணமாம் நம் அம்மா,
இயற்கையின் கருணையால் தோன்றிய
இணையில்லா தலைவர்.
தவமாய்த் தவமிருந்து
தமிழகம் பெற்ற
தன்னிகரில்லா முதல்வர் நம் அம்மா.

ஆழ்ந்த அறிவு,
அஞ்சா நெஞ்சுரம்,

படைப்பாற்றல்,
பன்முகத் திறமை

படை நடத்தும் வல்லமை,

குறிக்கோளை எய்திடும் உறுதி

நினைவாற்றல்,
நினைத்ததை முடிக்கும் நிர்ணயம்,

திறமை, தீரம்
தாய் நாட்டின் மீது தாளாத பற்று

மதி நுட்பம்,
மனித நேயம்,
மக்கள் சக்தியின் உறுதுணை
என குணநலன்கள் அணிகலன்களாய் அலங்கரிக்க,
தமிழர் நலனுக்காக, தன் வாழ்வையே
அர்ப்பணித்து வாழ்ந்து வரும்
தியாகத் தலைவி அம்மா அவர்கள்.

நீந்த மறந்த மானுக்கு வாழ்வு இல்லை,
நகர மறந்த வாகனத்துக்குப் பயணம் இல்லை,
படிக்க மறந்த மாணவனுக்கு தேர்ச்சி இல்லை,
பயிற்சி மறந்த வீரனுக்கு பரிசு இல்லை,
உழைக்க மறந்த மனிதனுக்கு உயர்வு இல்லை,
முயற்சி செய்யா மனிதனுக்கு முகவரியே இல்லை,

எங்கள் தலைவி இதய தெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்களை

எதிர்ப்பவர்க்கு எதிர்காலம் என்பது
இல்லவே இல்லை.

இதை உணராமல்
மாண்புமிகு அம்மா அவர்களை
அரசியலில் இருந்து அகற்றி விட வேண்டும் என்றும்
பொது வாழ்வில் ஈடுபடாதவாறு தடுத்துவிட வேண்டும் என்றும்
இன்னமும் சிலர் சூழ்ச்சி வலை பின்னிக் கொண்டிருக்கிறார்கள்.

இதெல்லாம்
மாண்புமிகு அம்மா அவர்கள் சந்திக்காதது அல்ல!
மாண்புமிகு அம்மா அவர்கள்
அரசியலில் அடியெடுத்து வைத்த காலம் தொட்டே
எதிர் கொண்ட எதிர்ப்புகளும்,
சந்தித்து வரும் சவால்களும்
ஒன்றல்ல, இரண்டல்ல !
தகர்த்தெறிந்த சதிச் செயல்களும்
கிழித்தெறிந்த  சூழ்ச்சி வலைகளும்
கொஞ்சமல்ல; நஞ்சமல்ல!

அத்தனை எதிர்ப்புகளையும்
சிங்கத்தின் துணிவோடு எதிர்கொண்டு
சதிகளின் முனை முறித்து,
சூழ்ச்சிகளைமுறியடித்து,
மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றி கண்டு வருகிறார்கள்.

ஆனால்,

இத்தனைக்குப் பின்னும்

மாறவில்லை அந்த சூழ்ச்சியாளர்கள்

- ✓ முக்காலமும் முழுமதியாய்
  ஜொலிக்கின்ற தாயை,
- ✓ ஏழைகளின் துயர் தீர்க்க,
  எந்நாளும் உழைக்கின்ற தாயை,
- ✓ காவேரியை மீட்டு வந்து
  கல்லணைக்கு சேர்த்த தாயை,
- ✓ முல்லையாற்றின் உரிமை காத்து
  உழவர்தம் கவலைகளைத் தீர்த்த தாயை,
- ✓ இன அழிப்பு இலங்கைக்கு
  குலை நடுக்கம் கொடுத்த தாயை,
- ✓ கண்ணிமையாய் தமிழர்களைக்
  காக்கின்ற தாயை,
- ✓ அன்னைத் திருநாட்டை ஆபத்து சூழ்ந்தபோது,
  பொன்னும் பொருளும் ஒரு பொருட்டல்ல என்று,
  தான்அணிந்திருந்த நகையெல்லாம்
  வாரித் தந்த வள்ளல் தாயை,
- ✓ தேசமே பெரிதென்னும்
  தெளிவுமனம் கொண்ட தாயை,
- ✓ தெரசாவும் ஹிலாரியும்
  அமெர்த்தியா சென்னும், அர்னால்டும்

வருகை தந்து வாழ்த்தி, வாயாரப் போற்றிடும்
திராவிட அரசியலின் திசைகாட்டியான தாயை,

- ✓ நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை,
  நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்,
  திமிர்ந்த ஞானச் செருக்கு என்னும்
  முண்டாசுக் கவிஞன் பாரதியின் பாடல் வரிகளுக்கு
  இலக்கணமாய் திகழும் தாயை,
- ✓ நீதிக்கே தலைவணங்கி,
  நித்தம் நித்தம் நடக்கும் தாயை,
- ✓ ஏங்கி நிற்கும் ஏழையரை,
  ஏணியாக உயர்த்தும் தாயை,
- ✓ எகிப்தும் நார்வேயுமே
  புகழாரம் சூட்டும் தாயை,
- ✓ தன்னலம் என்பதை மறந்து
  தமிழ்த் தரணிக்கே
  தன் வாழ்வை அர்ப்பணித்து வாழும் தாயை,

சதி செய்து சாய்த்து விட்டோம் என்று
கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள் சில பேர்.

அத்தகைய நஞ்சு, நெஞ்சினரை
சிறு புல்லினும் கீழாக ஒரு புழுவினும் கீழாக,
தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
தங்களுக்கெனவே வாழும் தாய்க்கு
இப்படி ஒரு கொடுமையா என்று

விழிகளில் நீர் முட்ட
வேதனையில் தவிக்கிறார்கள் தமிழக மக்கள்.

உலைக்கு அரிசி தந்த உத்தமத் தாய்
எங்கள் அம்மா அவர்கள்,
உலையிலிட்ட அரிசியாகி
மக்களின் உள்ளங்களும் இல்லங்களும்
ஒரு சேரக் கொதிக்கின்றன இப்போது.

அரைக்க மிக்சி, கிரைண்டர் தந்த
அன்புள்ளத்து அம்மா அவர்கள்.
அரைபடும் தானியமாய் மக்களின் உள்ளங்கள்
வதைபடுகின்றன இப்போது.

தாய் தந்த மின் விசிறி தருகின்ற குளிர்ச்சியிலும்,
புண்பட்ட மனதோடு
புழுங்குகின்றன இல்லங்கள் இப்போது.

உடுக்கச் சீருடையும்
நடக்கச் செருப்பும்
கடக்க மிதிவண்டியும்
உலகை உள்ளங்கைக்குள் அடக்க மடிக்கணினியும் தந்த
கலைமகள் அம்மா அவர்கள்,
பள்ளிச் செல்வங்களும் பெற்றோரும்
கண்ணீரில் கலங்குகின்றன இப்போது.

பள்ளியில் பந்தியிட்டு,

ஆலயத்தில் அன்னமிட்டு,
விலையில்லாஅரிசி தந்து
வாழும் மக்களுக்கு வயிறாறச் சோறிட்டு
அன்னலட்சுமியாய் அம்மா உணவகம் அமைத்த அன்னை
எங்கள் அம்மா அவர்கள்.
பசியாறிய மக்களின் வயிறுகள்
நெருப்பின்றி எரிகின்றன இப்போது.

கறவை மாடு, ஆடு தந்த
கனிவுளத்துத் தாய் அம்மா அவர்கள்.
அந்த ஐந்தறிவு இனமும்,
அதனாலே பயன் பெற்ற மனமும்,
ஏகமனதாய் வாடுகின்றன இப்போது.

ஆனால்,
மாண்புமிகு அம்மா அவர்களின்
கருணை முகம் கண்டு
மக்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தயவால்
தமிழகம் சொர்க்கம் ஆகும் என்று,
தளராத நம்பிக்கை எங்களுக்குண்டு என்றே
ஏங்கியிருக்கிறார்கள் தமிழக மக்கள்.

வீணர்தம் சூது வலை வீழ்த்தினாலும்,
வீறு கொண்டு எழுவார் மாண்புமிகு அம்மா என்ற

உறுதியான நம்பிக்கை எங்களுக்குண்டு என்றே
எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள் தமிழக மக்கள்.
ஆற்றல் அன்னை விரைவில்
தலைமையேற்க வருவார் என்ற
அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்குண்டு என்றே
உறுதியுடன் இருக்கிறார்கள் தமிழக மக்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களே
என்றும் எங்கள் முதலமைச்சர் என்று
கோடானு கோடி மக்கள்
நம்பிக்கையோடு இருக்கிறார்கள்

மாண்புமிகு அம்மா அவர்களே
மீண்டும் முதலமைச்சராக வேண்டும் என்று
லட்சோப லட்சம் மக்கள் மனம் உருகி
பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள் !
நம்பினோர் கெடுவதில்லை, இது
நான்மறையின் தீர்ப்பு !
பிரார்த்தனைகள் வீணாவதில்லை, இது
நாடு கண்ட தீர்ப்பு !
தமிழக மக்களின் நம்பிக்கை
என்றுமே கெட்டதில்லை
இது தமிழகம் கண்ட தீர்ப்பு !

பாரதி கண்ட புதுமை,
பார் வியக்கும் தலைமை,

சதியையும், விதியையும்

மக்கள் சக்தியின் துணையால் வென்றிடும் மகாசக்தி,

கழகத்தின் நிரந்தரப்பொதுச் செயலாளர்,

மக்களின் முதல்வர் ,

இதயதெய்வம், புரட்சித் தலைவி,

மாண்புமிகு அம்மா அவர்கள்,

சூதுமதி கூட்டத்தின் சூழ்ச்சி அரசியலை தோற்கடித்து
மீண்டும் தமிழ் மாநிலத்தின் முதல்வராய்
அன்று தான் மீட்ட புனித ஜார்ஜ் கோட்டையிலே
மறுபடியும் பாதம் பதிப்பார்கள்
மகோன்னத காலத்தை மலர்விப்பார்கள்.

கோடானு கோடி தொண்டர் படை கூடி
கோடானு கோடி மக்களின் நலம் நாடி
மாண்புமிகு அம்மா அவர்கள்
மீண்டும் அரியணையில் அமர்ந்திடுவார்கள்
இது உறுதி ! உறுதி ! உறுதி ! என்று கூறி அமைகிறேன்.

* * * * *

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**